Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 26-6-1985 புதன்கிழமை (ஆனி 12 ஷவ்வால் 7) முழக்கம் 141

## இந்திய ஜம்போ ஜெட் விபத்தில்

## மரணமானவர்களில் இலங்கைத் தமிழ்ப் பெண்களும் இருவர்

அத்லாந்திக் கடலில் வெடித்துச் சிதறிய இந்திய ஜம்போ ஜெட் விமானத்தில் மரணமான 329 பேரில் இலங்கையைப் பிறந்தகமாகக் கொண்ட இரு தமிழ்ப் பெண்களும் அடங்குவதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தர்மிளா லோறன்ஸ், சித்திகா லோறன்ஸ் என்ற இருவரும் சகோதரிகளாவர். பரத நாட்டியத்தில் மிகவும் பெயர் பெற்றவர்களான இவர்கள் இருவரும் கடந்த பல வருடங்களாக கனடாவில் வசித்து வருகின்றனர். பம்பாய் வருகையில் விபத்தில் சிக்கி இறக்க நேர்ந்தது.

★ தமிழ் பகுதியிலிருந்து ராணுவம் வாபஸ் ★ சிங்கள குடியேற்றம் முற்றாகத் தடை ★ அரசியல் கைதிகள் உடனடி விடுதலை

# தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு தீவிரவாதிகள் ஐந்து நிபந்தனை

## ராணுவ அட்டூழிய விசாரணைக்கு சர்வதேச ஆணைக்குழு; நேற்றைய 'இந்து' அறிவிப்பு!

(புதுடில்லி)

இம்மாதம் 18ம் திகதி அமுலுக்கு வந்த தற்காலிக யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் ஐந்து நிபந்தனைகளை விதித்ததாகவும், இவைகளை இலங்கை அரசு ஒப்புக்கொண்ட பின்னரே யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டதாகவும் புதுடில்லியில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றை மேற்கோள்காட்டி 'இந்து' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளுடன்கூடிய இடைக்கால ஒப்பந்தம் பதினைந்து வாரங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமென்றும், இக்காலத்துக்குள் இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்கும் தீர்வு காணப்படவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள ராணுவம் முதலில் முகாமுக்குள் அனுப்பப்படவேண்டும். பின்னர் இங்கிருந்து வாபஸ் பெறப்படவேண்டும்.

தமிழ்ப் பகுதிகளிலான சிங்களக் குடியேற்றத் திட்டம் முற்றுமுழுதாக வாபஸ்பெறப்படவேண்டும்.

தடுப்புக் காவலிலுள்ள சகல அரசியல் கைதிகளும், சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்படுவதுடன், அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுதல் நிறுத்தப்பட வேண்டும்;

கண்காணிப்பு வலயம், பாதுகாப்பு வலயம் ஆகிய தடை செய்யப்பட்ட பகுதிகளில் மக்கள் வழமைபோல நடமாட அனுமதிக்க வேண்டும்.

—4-ம் பக்கம் பார்க்க

### மருத்துவ படிப்புக்கு

## அகதி மாணவர் இருபது இடம்

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ள தமிழர்களின் பிள்

— 4ஆம் பக்கம் பார்க்க

## கூட்டணி தலைவர்கள் டில்லி செல்வதற்கு ஏற்பாடு

(சென்னை)

சென்னையிலுள்ள கூட்டணி தலைவர்கள் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோர் அடுத்த சில தினங்களுக்குள் புதுடில்லிக்குச் செல்வார்கள் என்று கொழும்புக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் விரும்பும் பேச்சுவார்த்தைக்கு முன்னர், கூட்டணி விதித்திருக்கும் நிபந்தனைகளால் உருவாகியிருக்கும் புதிய நிலைமை பற்றி டில்லியில் ஆராயப்படுமெனத் தெரிகின்றது.

கூட்டணித் தலைவர்கள் உடனடியாக நாடு திரும்பமாட்டார்கள். அதேவேளை இங்கு உள்ள கூட்டணிப் பிரமுகர்கள் தாமதமின்றி எதிர்க்கட்சிகளிடம் பேசுமாறும் பணிக்கப்பட்டுள்ளனர்.

### வட, கிழக்குப் பகுதியில்

## சகல பஸ் சேவைகளையும் மீண்டும் நடத்த உத்தரவு

(கொழும்பு)

வட பிராந்திய, கிழக்குப் பிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர்கள் தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உடனடியாக வழமைபோல் பஸ் சேவைகளை ஆரம்பிக்கவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அரசாங்க அதிபர்கள் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான எரிபொருளை வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் ரூபசிங்கா இவ்வுத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் ஏ. ஆர் மொஹமட் அலி, தமது பிரதேசத்திலுள்ள பெரும்

—4-ஆம் பக்கம் பார்க்க

## ஆணையாளரிடம் தமிழக நூல்கள் கையளிப்பு

தமிழ்நாடு அரசாங்கத்தினால் யாழ். பொதுஜன நூலகத்திற்கென வழங்கப்பட்ட நூல்களை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி கே.

—4ம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி அறிவிப்பு: இனப்பிரச்சினை தீர்வில்

# எனது முடிவை எதிர்க்கும் மந்திரி வெளியே போவார்

''இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நான் எடுக்கும் முடிவுகளை எந்த அமைச்சராவது எதிர்த்தால், அவர் வெளியேற்றப்படுவார்'' என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன ''பார் ஈஸ்டர்ன் எக்கனமிக் றிவியூ'' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மகாநாட்டு ஆலோசனைகளை எதிர்த்த அமைச்சர் சிறில்மத்தியு வெளியேற்றப்பட்டதையும் இப்பேட்டியில் ஜனாதிபதி நினைவூட்டி

- 4 ஆம் பக்கம் பார்க்க

## இளைஞர் ஒப்பந்தத்தை மீறினால் பாரதத்துக்கு அறிவிக்கப்படும்

இலங்கை அரசாங்கத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துள்ள ஐந்து பிரதான தமிழ்த் தீவிரவாத இயக்கங்களில் ஏதாவது இதனை மீறிச் செயற்பட்டால் அதுபற்றி உடனடியாக இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சு நேற்று அறிவித்தது.

பூநகரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலைத் தவிர கடந்த இரண்டு தினங்களில் வேறு அசம்பாவித சம்

—4ஆம் பக்கம் பார்க்க

### இயக்கப் பெயரால் இளைஞர்கள் தாக்கினராம்:

# தாய், தந்தை, 4 பிள்ளைகள் ஒன்றாக நஞ்சருந்தித் தற்கொலை!

### குஞ்சுப்பரந்தனில் சோக சம்பவம்

(கிளிநொச்சி நிருபர் மு விவேகானந்தன்)

இயக்கம் ஒன்றின் பெயரால் குஞ்சுப்பரந்தனிலுள்ள வீடொன்றில் சென்று ஒரு களவு சம்பந்தமாக விசாரணை நடத்திய இளைஞர் கோஷ்டி ஒன்று அவ்வீட்டிலுள்ள இளைஞர் ஒருவரையும் அவரது தந்தையையும் மூர்க்கத்தனமாக தாக்கியதால், அக்குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் ஒன்றாக நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டனர்.

தந்தை சங்கரப்பிள்ளை கிருஷ்ணசாமி (வயது 55) அவரது மனைவி கி. ராணி (வயது 40) மகன் கி. சிவகுமாரன் (வயது 22) பெண் பிள்ளைகள் கி சிவ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## 'மெயில்' பைகளின்றி மெயில் ரயில் ஓட்டம் உறங்கலிருக்கையில் காலி ஆசனம் இல்லை!

சுமார் இரண்டு வருடங்களின் பின்பு கொழும்பு - காங்கேசன்துறை இரவு மெயில் ரயில் நேற்றுக் காலை ஒரு மணி நேரம் தாமதித்து ஐந்து முப்பதுக்கு யாழ்ப்பாணம வந்தது.

ஓரளவு பிரயாணிகளுடன் வந்த இந்த ரயிலில் தபால் பெட்டி இணைக்கப்பட்டிருந்தும் அங்கு தபால் தரம் பிரிக்கும் வேலைகள் நடைபெறவில்லை. இதனால் தபால்கள் இதில் வரவில்லை.

நேற்று மாலை காங்கேசன்துறையில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட மெயில் ரயில் மாலை 6 50க்கு யாழ்ப்பாணம் வந்து இரவு 7.05க்கு புறப்பட்டது. இதில் அதிகமான பிரயாணிகள் பயணமானார்கள்.

2 ஆம், 3 ஆம் வகுப்பு உறங்கலிருக்கைகள் முழுவதும் நிரம்பியிருந்தன. படுக்கையுறங்கலிலும் சிலர் பயணம் செய்தனர். இங்கிருந்தும் தபால் பைகள்

—4ம் பக்கம் பார்க்க

### யாழ். ஐ. வி. சங்க ஊழியர்கள்

## இரண்டாம் நாளாக நேற்று ஊர்வலம், உண்ணாவிரதம்!

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்கள் இச்சங்கத்தில் இடம்பெற்ற கொள்ளையைக் கண்டித்து நேற்று நகரின் பிரதான வீதிகளினூடாக ஊர்வலம் சென்றனர்.

இந்த ஊர்வலம் காலை ஒன்பது மணியளவில் ஆஸ்பத்திரி வீதி, கே கே எஸ் வீதி, ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி ஆகியவற்றினூடாகச்

--4ஆம் பக்கம் பார்க்க

# 'பண்டிதமணி எழுத்துக்கள் நூல்களாக வர வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் படித்தவர்கள், அவரைப் பின்தொடர்பவர்கள், அவருடன் வாழ்பவர்கள் யாவரும் பாக்கியசாலிகள். அவர்களது எழுத்துக்கள் முழுவதும் நூல்வடிவு பெறவேண்டும்" என்று பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் நிர்வாக மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பேசிய பண்டிதர் சு. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இம்மாநாடு நடைபெற்றது.

பண்டிதமணி அவர்களின் எண்பத்தேழாவது பிறந்த தினத்தையொட்டி அவர் எழுதிய அன்பினைந்திணை, அத்வைதசிந்தனை இருநூல்களையும் எதிர்வரும் முப்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் திருநெல்வேலியில் நடத்துவதென்றும், பேராசிரியர்களான சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள், ஆ. வேலுப்பிள்ளை, அ. சண்முகதாஸ், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. க. உமாமகேஸ்வரன் ஆகியோர்களைப் பேச்சாளர்களாக அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் அங்கத்தவர்களாக இருந்து பெருந்தொண்டு புரிந்து சமீபத்தில் சிவபதமடைந்த திருநெல்வேலி சு. காசிநாதன், நீர்வேலி திரு. இ. சிதம்பரப்பிள்ளை ஆகியோர்களின் ஆன்மசாந்தியின் பொருட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆசிரியமணி ஆர். டி. சுப்பிரமணியம், பண்டிதை பொன். பாக்கியம், திருவாளர்கள் மு. நல்லையா, சி. க. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர்.

பண்டிதமணியின் எண்பத்து ஏழாவது பிறந்ததினம் எதிர்வரும் வியாழக்கிழமையாகும்.

## நயினை அம்பாள் மஞ்சத் திருவிழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மஞ்சத் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை 27-ம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் அம்பாளுக்கு காலை ஏழு மணியளவில் விசேட சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாள் எழுந்தருளி கைலாச வாகனத்தில் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெற்று பகல் திருவிழா 11-00 மணியளவில் முடிவடையும்.

மாலைத் திருவிழா பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகும். அம்பாள் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் வீதியுலா வருவார். போக்குவரத்து சம்பந்தமாக விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அடியார்கள் அனைவரும் தங்களது அடையாள அட்டைகளைக் கொண்டு வருமாறும் மஞ்சத் திருவிழாச் சபையின் தலைவரும், தர்மகர்த்தா சபை உறுப்பினருமான திரு. அ. சண்முகநாதன் கேட்டுள்ளார். அன்றைய தினமும் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினர் வழமைபோல் அன்னதானம் வழங்குவர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பழைய, புதிய அலுமாரிகள், கடைக் கதவுகள், ஷோகேஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: மணியம், 21/2, அம்மன் ரோட், கந்தர்மடம்.

### தவறிவிட்டது

வவுனியா, நிறஞ்சனாதேவி பொன்னையா அவர்களின் அடையாள அட்டை தொலைந்துவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் "ஈழமுரசு" காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

## நல்லூர் கல்வி வட்டாரம் மூன்று வலயங்களாகின்றது

(இருபாலை)

நல்லூர் கல்வி வலயம் மூன்று வலயங்களாக பிரிக்கப்படவுள்ளது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை மூலாதாரமாகக் கொண்ட பதினான்கு பாடசாலைகள் ஒருபிரிவாகவும், யாழ் இந்துக் கல்லூரியை மூலாதாரமாகக் கொண்டு பதின் மூன்று பாடசாலைகள் மறுபிரிவாகவும்,

கொக்குவில் இந்துக் கல்லூரியை மூலாதாரமாகக் கொண்ட பன்னிரண்டு பாடசாலைகள் மற்றொரு பிரிவாகவும் பிரிக்கப்படவுள்ளன. மொத்தம் முப்பத்தியொன்பது (39) பாடசாலைகள் நல்லூர் கல்வி வலயப் பிரிவுக்குள் அடங்குகின்றன.

1986ம் ஆண்டு முதல் 1988ம் ஆண்டு வரை எல்லாப் பாடசாலைகளும் தரமுயர்த்தப்படவுள்ளன.

இவ்வாண்டு நல்லூர் கல்வி வட்டாரத்தில் உள்ள பின்வரும் பாடசாலைகள் ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தரமுயர்த்தப்படவுள்ளதாக நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஈழமுரசிற்குத் தெரிவித்தார்.

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலை, திருநெல்வேலி ஆந்து தமிழ்கலவன் பாடசாலை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், கலட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, நல்லூர் ஆனந்தாவித்தியாசாலை; ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆகியவையே இந்த ஐந்துமாகும்.






※ வயாவிளானைச் சோந்த சூரியகுமாரன் சுசிலாதேவி தம்பதிகளின் புதல்வி சூரியதர்ஷினி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ கொட்டடி கண்ணாபுரம் சத்தியசிலன் பாலசௌந்தரி தம்பதிகளின் மகள் தர்சிகா இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ மீசாலை தெற்கு கேணியடி குணபாலசிங்கம் கனகம்மா தம்பதிகளின் மகள் பிரதீபா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ கிளிநொச்சி கண்டி வீதி பூலோகநாதன் வாகீஸ்வரி தம்பதிகளின் மகள் சுகன்யா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

※ மட்டுவில் ஒடக்கு சிவசாமிக் குருக்கள் சாரதா தம்பதிகளின் மகன் ஜெயந்திநாத சர்மா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ பாஷையூர் அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரீனம்மா தம்பதிகளின் மகள் அனிஸ்ரா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கொழும்புத்துறை ஐயாத்துரை வரதலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி கமலராணி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## அந்தச் செய்தி: ஓர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"திருநெல்வேலி அனாதைகளுக்கு நோருட் நிறுவனம் பத்து இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது" என்று 19-6-85 "ஈழமுரசு" இதழில் வெளியான செய்தி தொடர்பாக மேற்படி இல்லத்தின் தலைவராகவும், முகாமையாளராகவும் உள்ள திரு. எஸ். ஆர். கனகநாயகம் பின்வரும் விளக்கத்தை அளித்துள்ளார்.

"இவ்வில்லத்தில் தற்போது 265 பிள்ளைகள் வசிக்கிறார்கள். இவர்கள் அண்மையில் உள்ள முத்துத்தம்பி வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். நோருட் நிறுவனத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை. அத்துடன் அந்நிறுவனம் இவ்வில்லத்திற்கு எவ்வித பண உதவி செய்யவுமில்லை" இவ்வாறு மேற்படி விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## புதிய கட்டடம்

(கல்வியங்காடு)

கொக்குவில் உப-அலுவலகக் கட்டடம் விஸ்தரிக்கப்படவுள்ளது. ஐம்பதாயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டடம் அலுவலக உபயோகத்துக்காக அடுத்த மாதம் பாவனைக்கு எடுக்கப்படவுள்ளது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| குணசேகரம் | திலகவதி |
| (விவசாயத் திணைக்களம், ஓமான்) | |

நாள்: குரோதன வருஷ ஆனி மீ 15ந் உ (29-6-85) சனிக்கிழமை காலை 7.30 — 9.00 மணி

நிகழிடம்: தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

| | |
|---|---|
| திரு., திருமதி வேலாயுதம் | திருமதி இலட்சுமிப்பிள்ளை |
| (அப்பாத்துரை) | கந்தையா |
| ஆஸ்பத்திரி வீதி, | தெல்லிப்பளை கிழக்கு, |
| சங்கானை. | தெல்லிப்பளை. |



காரைநகர் திக்கரை முருகமூர்த்தி தேவஸ்தானம்

## புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

ஸ்தபதி: "சிற்பகலாகேசரி" ச, ஜெயராஜா அவர்கள்
காலம்; 28-6-85 வெள்ளி காலை
உருவமைப்பு: சரவணன் கலையக கலைஞர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

காரைநகர் — தேர்த் திருவிழா உபயகாரர் C. S. ஆறுமுகம்பிள்ளை குடும்பத்தினர்



## கொழும்புத்துறையில் தொலைத்தொடர்பு (ரெலிபோன்)


யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாகாணங்கள் (கொழும்பு) செல்பவர்கள் தங்கள் நிலைமைகளை குடும்பத்தார்க்கோ, நண்பர்கட்கோ — உடனடியாகத் தெரியப்படுத்தவும் அவசியமாயின் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

2 3 4 4 0 யாழ்ப்பாணம்

கொழும்புத்துறை உப தபால் கந்தோர் அருகாமையில்.


## 15 வது ஆண்டு நினைவு



அல்பிறட்
(துரைசிங்கம்)
திதி: 26.6.85

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13.11.1928 | 26.6.1970 |

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்,


## கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனிழந்தோர் பாடசாலை

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனிழந்தோர் பாடசாலை அதிபர், ஆசிரியர், பிள்ளைகள் எதிர்வரும் 29-6-85 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நடைபெற இருக்கும்

சர்வதேச வைஸ்மன் கழக உதவித் திட்ட

வெள்ளிவிழா மண்டபத் திறப்பு விழாவிலும்
வெள்ளிவிழா மலர் வெளியீட்டிலும்
ஈராண்டு பரிசளிப்பு விழாவிலும்

கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றனர்.



**ISUZU** லொறி, மற்றும் **ELF** 150, 250, 350 ஆகியவற்றிற்கான மோட்டார் உதிரிப்பாகங்கள் சகாய விலையில்
(கொழும்பு CWE இல் கொள்வனவு செய்யும் விலையில்)

யாழ்ப்பாணத்தில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி C.W.E. ஸ்தாபனத்தின் வடபிராந்திய விற்பனையாளராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்.

## கொழும்பு மோட்டோர் ஸ்ரோர்ஸ்

இல, 37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 23745

ஈழமுரசு



உதய சிந்தனை

கடவுள் ஒருவனைத் தவிர யாராலும் கருணை காட்ட முடியாது. அவன் எப்போதும் கருணைமயமாகத்தான் இருக்கிறான். பிரார்த்தியுங்கள். உங்களுக்கும் கருணை புரிவான்.

- விவேகானந்தர்

87, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

26-6-1985 புதன்கிழமை (குரோதன ஆனி 12)

## பலப்படுத்துவதற்கு பதினெட்டு வாரம்!

பாரதத்தின் அரசியலமைப்புப் பற்றியும், மாநில, யூனியன் ஆட்சி அமைப்புப் பற்றியும் அறிந்து கொள்ளச் சென்ற இலங்கையின் சட்ட அறிஞர்கள் குழு கடந்த சனிக்கிழமை நாடு திரும்பியது.

இவர்களது விஜயம் எதிர்பார்த்த அளவு வெற்றியை அளிக்கவில்லை என்று புதுடில்லியில் வெளியாகியிருக்கும் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

இந்தியாவிலுள்ள பிரதேச சுயாட்சி, மாநில சுயாட்சி முறை இங்கு அமுல்படுத்த முடியாதென்பதே சட்ட அறிஞர்களின் ஆலோசனையாக இருக்கலாம்.

'வடக்கும் கிழக்கும் இணைந்த சபையொன்றை வழங்கமாட்டேன் என்பதை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நான் தெரிவித்துவிட்டேன்' என்று இரு தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி நிகழ்த்திய உரை, இலங்கைச் சட்ட அறிஞர்களின் ஆலோசனைக்கு எதிரானதல்ல.

ஆனால் பேச்சுவார்த்தை விரைவில் மீண்டும் ஆரம்பமாகுமென்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளிப்பதுபோல, சென்னையிலிருந்து கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் விடுத்திருக்கும் ஒரு அறிக்கை அவ்வாறான ஒரு பேச்சுவார்த்தை நடக்குமா என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்களில் வாழ்க்கை சகஜ நிலைமைக்குத் திரும்ப வேண்டும்; அவசரகால நிலைமை வாபஸ் பெறப்பட வேண்டும்; அதன் பின்னரே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும்' என்பது அமிர்தலிங்கத்தின் முதலாவது நிபந்தனை.

'எந்தப் பேச்சுவார்த்தையானாலும், தீவிரவாத இளைஞர் இயக்கங்களின் முககியஸ்தர்களும் அதில் பங்குபற்ற வேண்டும்'' என்பது அமிர்தலிங்கத்தின் இரண்டாவது நிபந்தனை.

அவசரகால சட்ட விதிகளை மேலும் ஒரு மாதத்துக்கு அரசாங்கம் நீடித்துள்ளது. பிரிவினைவாதத்தையும், பயங்கரவாதத்தையும் கைவிட்டால் மட்டுமே தீவிரவாதிகளுடன் பேச முடியுமென்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் அமிர்தலிங்கத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் எந்தளவில் ஏற்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்!

இதற்கிடையே, மற்றொரு அரசியல் குழு அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்ட நுணுக்கங்களை ஆராய்வதற்காக அங்கு செல்லவிருக்கின்றதாம்!

பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா தலைமையில் இக்குழு செல்லவுள்ளது. தமிழரின் நியாயமான கோரிக்கைகளுக்காக உண்மையாகக் குரல் கொடுக்கும் ஷெல்டன் ரணராஜா நேர்மையாக நடந்துகொள்வார் என்ற நம்பிக்கை அனைவருக்குமுண்டு.

ஆனால், அவர் தெரிவிக்கும் ஆலோசனைகளை அரசாங்கத் தலைவர்கள் இதய சுத்தியுடன் செயற்படுத்துவார்களா?

அரசியல் ரீதியாக இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் கூறிக்கொள்ளப்படும் இவ்வேளையில், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் தென் கொரியாவுக்குப் பறந்து சென்றுள்ளார்.

சிலவேளை தென் கொரிய அரசியலமைப்பை அலச அவர் சென்றிருக்கக்கூடும்.

அதுபற்றி வெளியாகியுள்ள துண்டுப் பிரசுரங்கள், 'மீண்டும் ராணுவத் தீர்வுதானா?'' என்ற அச்சத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது.

'தற்காலிக போர் நிறுத்தம் என்பது அரசாங்கம் தன்னைப் பலப்படுத்தவும் உலக நாடுகளிடம் உதவி பெறுவதற்காகவும் ஏற்படுத்திக்கொண்ட தந்திரம்' என்று கலைஞர் கருணாநிதி கூறியதை நிரூபிப்பதாக இப்பிரசுரங்கள் அமைந்துள்ளன.

மொசாட்டும், சி. ஐ. ஏக்காரரும் இணைந்து, திட்டமிட்டு நடத்தும் பலப்படுத்தல் தந்திரமே, பதினெட்டு வார இடைவேளை என்று இப்பிரசுரங்கள் கூறுவதை முற்றாகத் தட்டிக்கழிக்க முடியாது.

தமிழ் மக்கள் களியாட்டங்களிலும், கொண்டாட்டங்களிலும் இக்காலகட்டத்தை அவமே போக்குவதால், எதிர்காலப் பேரபாயங்களை உணராதிருக்கலாம்.

ஆனால் தற்போது நத்தை வேகத்தில் இடம்பெறும் தீர்வு நடவடிக்கைகள், நிச்சயமற்ற எதிர்காலமொன்றை உருவாக்குவதை ஒவ்வொரு பிரஜையும் உணர வேண்டியது அத்தியாவசியமாகும்.

அதன்மூலமே, ஒவ்வொருவரும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

★ விபத்தின் எதிரொலியாக அரசு உஷார் உத்தரவு

# இந்திய விமானங்களுக்கு மேலும் கூடிய பாதுகாப்பு!

(புதுடில்லி)

இந்திய விமான விபத்துச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இரு பயணிகள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மறுத்து விட்டனர். விசாரணைகள் பூர்த்திபெறும் வரை எதனையும் கூறமுடியாது என்று அவர்கள் தெரிவித்தனர் இப்பயணிகள் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க அரசு சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் வலியுறுத்தியுள்ளன.

இது இவ்வாறு இருக்க லண்டனிலிருந்து நியுயோர்க் செல்லவிருந்த இந்திய விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிளப்பப்பட்ட புரளியையடுத்து விமானத்தில் கடும் சோதனை நடத்தப்பட்டது. இதனால் விமானம் ஏழு மணித்தியாலங்கள் தாமதிக்க நேர்ந்தது.

இவ்விமான விபத்துக் குறித்து தான்ஸானிய ஜனாதிபதி திரு. நியரேரேயும் தனது அனுதாபத்தைப் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியிடம் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

விபத்துக்குள்ளான விமானத்தின் பிளைட் றெக்கோடர் கருவிகளைக் கண்டுபிடிக்கும் பணியில் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட பிரிட்டிஷ் கடலாய்வுக் கப்பல் ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சகல பாரத விமானங்களுக்கும் பாதுகாப்பை மிக வலுவாகக் கூட்டுமாறு பாரத அரசாங்கம் அதிகாரிகளை உஷார்படுத்தியுள்ளது.

ஷியா முன் தூதர் சர்மா சொன்னார்

## பாகிஸ்தான் வளம், வலு பெறுவதை விரும்புகிறோம்

(கராச்சி)

''வளமும், வலுவும் உள்ள நாடாகப் பாகிஸ்தான் திகழ்வதை பாரதம் விரும்புகிறது'' என்று பாகிஸ்தானுக்கான பாரதத் தூதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. கே. டி. சர்மா தனக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் பேசுகையில், புதுடில்லியில் நடைபெறவுள்ள இருநாடுகளுக்குமிடையிலான கூட்டுக்கமிஷன் கூட்டம் பயனுள்ள வகையில் அமையும் என எதிர்பார்க்கிறேன்'' என்றார்.

டிசம்பரில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்க தான் ஆவல் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈராக்விடுத்துள்ள அறிவிப்பு:

## இருநூறு ஈரானியர் மரணம்

(பாக்தாத்)

வளைகுடாப் போரில் தான் நடத்திய கடும் தாக்குதல்களில் இருநூறுக்கும் மேற்பட்ட ஈரானியர் இறந்துள்ளனர் என ஈராக் கூறுகிறது.

இருநாடுகளும் நீடித்த இப்போரில் பீரங்கி, போர் விமானங்கள், ரொக்கட்டுகள் முதலானவற்றையும் பயன்படுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

## விபத்தில் மூவர் பலி

(திருச்சி)

திருச்சியில் நிகழ்ந்த லொறி-வான் விபத்தில் மூவர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

## வேலை நிறுத்தம் முடிந்தது

(சென்னை)

சென்னைத் துறைமுகத்தின் ஒருபகுதித் தொழிலாளர்கள் நடத்தவந்த வேலைநிறுத்தப் போராட்டம் திங்கட்கிழமையுடன் விலக்கிக் கொள்ளப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

ஆகஸ்ட் மாதத்திற்குள் இவர்கள் கோரிக்கைகள் குறித்து நல்ல முடிவு காணப்படுமென மேயிடம் அளித்த வாக்குறுதியை அடுத்த்த வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.

## காசிகா இத்தாலியின் புதிய ஜனாதிபதியாக தெரிவானார்

(ரோம்)

இத்தாலயில் கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த திரு. பிரான்சிஸ்கோ காசிகா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. காசிகா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு சாந்தரோ குர்சினிக்கு அடுத்த படியாக இத்தாலியின் ஜனாதிபதியாக வந்துள்ளார்.

## கர்னாடகம் முதலிடம்

(பெங்களூர்)

பாரதத்திலேயே வழக்குகளை விரைவாக விசாரணை செய்து தீர்வு காண்பதில் கடந்த இரு வருடங்களில் கர்னாடகம்தான் முதலிடம் வகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அகாலிதள் தலைவர் அறிவிப்பு:

## நாடு முழுவதுமான துக்கம் நானும் பங்கு கொள்கிறேன்

(புதுடில்லி)

இந்திய விமான விபத்தால் நாடு முழுவதும் கொண்டுள்ள துக்கத்தில் தாமும் பங்கு கொள்வதாக அகாலிதள் தலைவர் லொங்கோவால் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் கவர்னர் அர்ஜுன் சிங்கும் தனது நெஞ்சார்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்

## வெள்ளம் செய்த அவலம்

(கொஹாட்டி)

அஸாமில் பெரு வெள்ளத்தால் ரயில், சாலைப்போக்குவரத்துகள் தொடர்ந்தும் துண்டிக்கப்பட்டநிலையிலேயே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணியில் பல படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பல பகுதிகள் இன்னமும் வெள்ளத்திலேயே மூழ்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஊதிய உயர்வு

(புதுடில்லி)

பாரதத்தில் வங்கி ஊழியர்களின் ஊதியம் உயர்த்தப்படவுள்ளது.

இவ்வருடம் பாரதத்திலிருந்து

## 10 இலட்சம் தொன் உணவு தானியம் ஏற்றுமதியாகும்

(புதுடில்லி)

பாரதம் நடப்பு வருடத்தில் குறைந்தது பத்து இலட்சம் தொன் உணவு தானியத்தையாவது வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் என நேற்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே இரண்டு இலட்சம் தொன் கோதுமை சோவியத் யூனியனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் வருடத்தில் அந்நாட்டுக்கு ஐந்து இலட்சம் தொன் கோதுமை அனுப்புவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளுக்கு மேலும் ஒரு தொன் கோதுமை அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரியில் ஏழாண்டுத் திட்டக் காலத்தில் பதினாறாயிரம் படித்த வாலிபர்களுக்கு வேலை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென எட்டுக் கோடியே எழுபத்து ஆறு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈழமுரசு

விமான டிக்கட்டுகளை மலிவாகப் பெறுவதற்கும்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ ஹொலண்ட்
மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளைச் செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்:
TET
ரான்ஸ் யூரோ ரவல்ஸ்
தொடர்பு: S. K. மகேந்திரராஜா
இல 6, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23831

அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள்

# அடகு நகைகளை யாழ்ப்பாணத்தில் வைத்தே வழங்க வேண்டும்!

வடபகுதி மக்கள் அனுபவித்து வரும் பல்வேறு கஷ்டங்களையும் எடுத்துக் கூறும் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

டாக்டர் ஜி. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் சென்ற குழுவினர் சமர்ப்பித்த மகஜரில் முக்கியமாக விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள்கள் வருமாறு:-

வடபகுதி வங்கிகளில் அடகு வைத்தவர்களின் நகைகள் யாழ்ப்பாணத்தில் வைத்து மீளக் கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை வங்கி வேலைகள் நிறுத்தப்பட்ட காலத்திலிருந்து மேற்படி நகைகளுக்கு வட்டி அறவிடக் கூடாதென்றும் ஏற்கனவே அடகுக்குரிய முதலும் வட்டியும் செலுத்தியும் இதுவரை நகைகள் மீளக் கொடுபடாதவர்களுக்கு அன்றைய தினத்திலிருந்து அதற்குரிய வட்டி கொடுக்கப்பட வேண்டுமென்பதுடன் நகைகளும் மீளக் கொடுக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே தடை அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டும் காஸ் வெல்டிங் ஒக்சிஜின் சிலிண்டேர்களுக்கான விநியோகம் இன்னும் பாவனையாளர்களுக்குக் கொடுபடவில்லை. இதை பாவனையாளர்களுக்கு உடனடியாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

போக்குவரத்துச் சேவையில் கூடிய வடபிரதேசப் போக்குவரத்துச் சபையின் பஸ்களை அதிகரிக்க வேண்டும், எரிபொருள் விநியோகத்தைச் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாகவும், தனியார்களூடாகவும் விநியோகிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஆங்கில வாரஏடான "சற்றடே றிவியூ" வினை கொழும்பில் வைத்து தணிக்கை செய்யப்படும் தற்போதைய நடைமுறையை மாற்றி யாழ்ப்பாணத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியினால் தணிக்கை செய்யும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும்.

இவ் விபரங்களைக் கேட்டறிந்த அரசாங்க அதிபர், இதில் கூறப்பட்ட சில விடயங்கள் ஏற்கனவே நடைமுறைக்கு வர விருப்பதாகவும் ஏனைய விடயங்களில் தான் கூடிய கவனம் எடுப்பதாகவும் தூதுக் குழுவிடம் எடுத்துக் கூறினார். இத்தூதுக்குழுவில் பொதுச் செயலாளர் சேர். தேவராஜா, உபதலைவர்களான ஆர். செல்வநாயகம், சட்டத்தரணி சி. சிவநேசன் ஆகியோரும் இடம் பெற்றனர்.

## தாக்கப்பட்டு பணம் பறிமுதல்

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் மருதனார்மடத்துக்கு அருகில் இருபதினாயிரம் ரூபாவுடன் வந்தவர் இனம் தெரியாத மூவரால் தாக்கப்பட்டு, அவரது பணமும் பறிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான எஸ். தர்மதேவன் (26) காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இளைஞர் ஒப்பந்தத்—

—1-ஆம் பக்கத் தொடர்

பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை குறிப்பிட்ட 5 இயக்கங்களில் எதுவும் செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ·மெயில்' பைகளின்றி...

—1-ஆம் பக்கத் தொடர்

அனுப்பப்படவில்லை.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வழியனுப்புவோர் அதிகமாகக் காணப்பட்டனர்.

நேற்றைய மெயிலில் இங்கிருந்து காஸ் சிலிண்டர்கள் உட்பட பார்சல்கள் அனுப்பப்பட்டன. உணவுச்சாலைப்பெட்டியும் இணைக்கப்பட்டிருந்தது.

## சகல பஸ் சேவை....

—1-ஆம் பக்கத் தொடர்

பாலான பாதைகளில் பஸ் சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் வடபிராந்தியத்திற்கான பஸ் சேவை விரைவில் ஆரம்பமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தினசரி நடக்கும் பட்டப்பகல் நாடகம்:

# யாழ். செயலக வாசலில் 'தரகர்' மோசடி; அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்!

யாழ். கச்சேரியிலுள்ள மேலதிக பதிவாளர் திணைக்களத்தில் தினமும் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு பிரதிகளைப் பெற வருபவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

இவர்கள் கச்சேரிக்கு வந்ததும் வாசலில் நிற்கும் சிலர் இவர்களிடம் தாம் இந்தப் பிரதிகளை உடன் எடுத்துத் தருவதாகவும், மாலையில் தருவதாகவும் பேரம் பேசுகிறார்கள். இதற்கு அப்பாவிப் பொதுமக்கள் இலக்காவதாகப் பல புகார்கள் இந்தத் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளன. சிலருக்கு இந்த நபர்களால் போலிப் பத்திரங்களும் வழங்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கடந்த வாரம் இங்கு வயோதிபப் பெண் ஒருவரிடம் பத்து ரூபா முத்திரை என பத்து சத முத்திரை விற்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது.

தபாலில் அனுப்பப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களை சிலர் எடுத்து அதிலுள்ள அதிகாரியின் ஒப்பம் முத்திரை முதலியவற்றைப் பெற்று போலி பிறப்புச் சாட்சிப் பத்திரங்களை வழங்குகிறார்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இங்குள்ள இதன் அலுவலகத்தில் தமது சந்தேகங்களைக் கேட்டு அறியும்படியும், வெளியில் நிற்போரிடம் ஏமாற வேண்டாம் எனவும் இத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார். தற்போது சனி, ஞாயிறு தினங்களிலும் இங்குள்ள ஊழியர்கள் கடமையாற்றுவதால் மூன்று வாரங்களில் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## ஆணையாளரிடம்....

—1ம் பக்கத் தொடர்

சிவஞானம் இந்தியத் தூதுவர் திரு. ஜே.என். டிக்சிற்றிடமிருந்து நேற்றுப் பெற்றுப்பேற்றார். கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் நேற்று மாலை இது சம்பந்தமான வைபவம் இடம்பெற்றது.

## தாய், தந்தை—

...1ஆம் பக்கத் தொடர்

சோதி (வயது 19) கி. செல்லம்மா (வயது 17) கி. சிவகலா (வயது 15) ஆகியோரே இறந்தவர்களாவர். இவர்களின் சடலங்கள் இவர்களின் வீட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள காடு ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டன.

மீசாலையைச் சொந்த ஊராகக் கொண்ட இக்குடும்பத்தினர் பலகாலமாக குஞ்சுப்பரந்தனில் வசித்து வந்த விவசாயிகளாவர். கடந்த சனிக்கிழமை இறந்தவர்களின் வீட்டுக்கு வந்த இளைஞர்கள் சிலர் கி. சிவகுமாரன் என்பவரை சைக்கிள் ஒன்று களவு போனதன் காரணமாக விசாரிப்பதற்காக அழைத்துச் செல்வதாக கூறி அழைத்துச் சென்றதாகவும், பின்னர் ஞாயிற்றுக்கிழமை அயலவர்களுடன் இவரை அழைத்து வந்து இவரது தந்தையையும் தாக்கியதாகவும் பெண்பிள்ளைகளை தகாத வார்த்தையால் பேசியதாகவும், இறந்த சங்கரப்பிள்ளை கிருஷ்ணசாமியின் சகோதரரான சங்கரப்பிள்ளை தியாகராசா தெரிவித்தார். இவர் இறந்தவர்களின் பக்கத்து வீட்டில் வசித்து வருபவராவார்.

இறந்தவர்கள் எழுதிவைத்த கடிதத்தில் தாங்கள் நீதியீனமாக தண்டிக்கப்பட்டதாகவும், இதனால் தாங்கள் தற்கொலை செய்துகொள்வதாகவும் இது குறித்து குறிப்பிட்ட இன்னொரு இயக்கத்திடம் கூறி விசாரணை நடத்துமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தாங்கள் பயிர் செய்துள்ள கமத்தில் வரும் வருமானத்தை எடுத்து தங்களின் சில கடன்களைத் தீர்க்குமாறும் கடிதத்தில் எழுதியுள்ளனர்.

# வங்கியுள் நுழைய முயன்றவர் பொலிஸில் ஒப்படைப்பு!

யாழ் - மாவட்டம் மாமூல் நிலைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்குப் பின்னர் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இச் சந்தேக நபர் மதுபோதையில் யாழ்- நகரில் உள்ள வங்கி ஒன்றினுள் பிரவேசிக்க முனைந்தபோது வங்கிப் பாதுகாப்பு ஊழியரால் பிடிக்கப்பட்டு யாழ்- பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிசார் இவரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

## அகதி மாணவர்....

— 1ஆம் பக்கத் தொடர்

ளைகளுக்கு தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் இருபது இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக தமிழக மேலவையில் சுகாதார அமைச்சர் டாக்டர் ஹண்டே நேற்றுத் தெரிவித்தார்.

மற்றைய தென் மாநிலங்களிலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் ஒதுக்குமாறு தமிழக அரசு கேட்டிருப்பதாகவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## எனது முடிவை....

திச் சுட்டிக் காட்டியுள்ளார்.

"அமைச்சரவை எனது முடிவை அங்கீகரித்த பின், அதனைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவேன். தற்போதைய அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் எனக்கேயுண்டு. அப்படி நடந்தால் பின்னர் நான் மட்டுமே எனது முடிவைச் செயற்படுத்த இருப்பேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"எனது ஆலோசனைகளைப் பொது மக்கள் எதிர்த்தால் மட்டும் நான் ராஜினாமாச் செய்ய வேண்டி வரும். ஆனால் அப்படியான ஒரு நிலைமை ஏற்படாது என்பது நிச்சயம்" எனவும் ஜனாதிபதி இப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர பாரதப் பிரதமர் எடுத்து வரும் முயற்சிகளுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார். இந்தப் பேட்டி ஜூன் 7ம் திகதி இதழில் வெளியாகியுள்ளது.

## விளையாட்டுப் போட்டிகள்

(நல்லூர்)

யாழ். பரி. யோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 28ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. இப்போட்டிக்கு பிரதம அதிதிகளாக வைத்திய கலாநிதி யே. பி. சி. பிலிப்ஸ் தம்பதிகள் கலந்து கொள்கின்றனர். கல்லூரியின் மேற்பிரிவுப் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி 29ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. இப்போட்டிக்குப் பிரதம அதிதிகளாக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரும் அவரது பாரியாரும் கலந்து கொள்கின்றனர்.

இப்போட்டிகள் கல்லூரி அதிபர் திரு. சீ. ச. ஆனந்தராஜன் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

## தற்காலிக யுத்த....

— 1ஆம் பக்கத் தொடர்

ராணுவ அத்துமீறல்கள், படுகொலைகளை விசாரிக்க சர்வதேச விசாரணைக் கமிஷன் ஆகிய ஐந்துமே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்று 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## இரண்டாம் நாளாக—

— 1ஆம் பக்கத் தொடர்

சங்கத்தைச் சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள சங்க வளவில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

## மரண அறிவித்தல்

அதி வணக்கத்துக்குரிய

**J. B. பாக்கியநாதர் C. R.**

தோலகட்டி ஆச்சிரம அதி சிரேஷ்டர் அதி வணக்கத்துக்குரிய J. B. பாக்கியநாதரின் பூதவுடல் இன்று (26-6-85) தோலகட்டி ஆச்சிரமத்தில் காலை 8.00க்கு திருப்பலி பூசையின் பின்பு அடக்கம் செய்யப்படும்.

தகவல் : செபமாலை தாசர் சபை

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேட்டற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 26-06-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336